# மன்னா

CSI தமிழ் திருச்சபை

அலைன்




உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார் அவர் வல்லமையுள்ளவர் அவர் இரட்சிப்பார் அவர் உன்பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார் அவர் உன்பேரில் கெம்பீரமாய்க் களிகூருவார்


பொழிவு 12 டிசம்பர் 2019 ஆகாரம் 12

# JANUARY 2020

| | | |
|---|---|---|
| 3rd Jan<br>11:00AM – 1:00PM | உபவாச ஜெபக்கூடுகை | ஆயர் இல்லம் |
| 3rd Jan<br>7:00PM – 9:00PM | பரிசுத்த திருவிருந்து ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 10th Jan<br>7:00PM – 9:00PM | மாலை ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 17th Jan<br>7:00PM – 9:00PM | பரிசுத்த திருவிருந்து ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 18th Jan<br>7:00PM – 9:00PM | பெண்கள் ஐக்கிய சங்கம் | ஆயர் இல்லம் |
| 24th Jan<br>5:00AM – 6:30AM | மாலை ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 31st Jan<br>7:00PM – 9:00PM | துதி பாடல் ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 31st Jan<br>11:30PM-12:30AM | மாத இறுதி / புதிய மாத துவக்க ஆராதனை | ஆயர் இல்லம் |

ஆராதனைகளுக்கு வருவதற்கு வாகன வசதிகள் தேவைப்படுமாயின் நீங்கள் கீழ்க்கண்ட தொலைபேசியில் தொடர்பு கொண்டால், வாகன வசதி செய்துதரப்படும்.

**050 586 8173 / 056 441 1225 / 050 482 1006**


## சி.எஸ்.ஐ தமிழ் திருச்சபை அலைன் ஊழியங்கள் (பொது)

### மெயின் ஒர்ஷிப் ஹால் – ஒயாசிஸ் மருத்துவமனை வளாகம், அலைன்
### Main Worship Hall – Oasis Hospital Campus, Al-Ain, UAE

| | | |
|---|---|---|
| 1st & 3rd Fridays / வெள்ளி | *7:00 PM* | Communion Service / திருவிருந்து ஆராதனை |
| 1st & 3rd Fridays / வெள்ளி | *6:30 PM* | Men's Prayer / ஆண்கள் ஐக்கிய சங்கம் |
| 2nd & 4th Fridays / வெள்ளி | *7:00 PM* | Evening Regular Service / மாலை ஆராதனை |
| 2nd & 4th Fridays / வெள்ளி | *6:30 PM* | Bible Study / வேதாகம வகுப்பு |
| Friday's / வெள்ளிகிழமை | *6:15 PM* | CBS / சிறுவர் வேதாகம வகுப்புகள் |

### ஆயர் இல்லத்தில் நடைபெறும் ஊழியங்கள்
### Ministries at Parsonage

| | | |
|---|---|---|
| 1st Friday / வெள்ளி | *11:00AM* | Fasting Prayer / உபவாச ஜெபம் |
| 2nd & 4th Sat / சனிக்கிழமை | *7:00 PM* | Gospel Ministry / சுவிசேஷ ஊழியம் |
| 3rd Sat / சனிக்கிழமை | *7:30 PM* | Women's Prayer / பெண்கள் ஐக்கிய சங்கம் |
| Wednesday's / புதன்கிழமை | *7:30 PM* | Bible Study / வேதாகம வகுப்பு |
| Last Day of Every Month<br>மாதத்தின் கடைசி நாள் | *11:30PM* | Month End & Beginning Prayer<br>மாத இறுதி/புதிய மாத துவக்கஆராதனை |




# உள்ளே வாசிக்க..


- ஆயர் மடல்
- செயலரிடமிருந்து
- திருமறை தியானப்பகுதி
- வேதாகம களஞ்சியம்
- மிஷனரி சுயசரிதை
- கட்டுரைகள்
- Youth Special
- பாடல் பிறந்த கதை
- Children's Corner
- வேத வினாவிடை போட்டி
- பிறந்த & திருமண நாள்
- தெரிந்து கொள்வோம்
- வேத வாசிப்பு

# ஆயர் மடல் 2020

அன்புக்குரியவர்களே,

**புத்தாண்டு வாழ்த்துக்கள்!**

**I wish you all have a Blessed & Prosperous New year 2020.**

இந்த புத்தாண்டில் புதிய - புதிய ஆசீர்வாதங்கள் வேண்டுமா ?

இதுவரை நீங்கள் உங்கள் வாழ்க்கையில் அனுபவித்திராத ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை, பூலோக ஆசீர்வாதங்களை (unlived part of life) ருசித்துப்பார்க்க வேண்டுமா? அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு! தேவனுடைய பக்கத்திலிருந்து இந்த புத்தாண்டை, துவக்க முதல் முடிவு வரை பார்த்து வாழப்பழகுங்கள்.


பொதுவாக நாம்செய்கிற தவறு இந்த வாழ்க்கையை நம்சுயம்சார்ந்த பக்கத்திலிருந்தே பார்த்து வாழப்பழகிக்கொண்டது 'தான். நம் வாழ்க்கைப்பயணத்தில் அடுத்த நிமிடம், அடுத்த நாள் என்ன நடக்கும்? என்று நமக்கு தெரியாது (James 4:14). இப்படிப்பட்ட ஒரு நிலையற்ற மானிட வாழ்க்கையிலே, நாம் நம்முடைய அறியாமையால், ஆவிக்குறிய விழிப்புணர்வு இல்லாமையால் My life My wish! என்று, நம்மனம் போனபடி தேவனால் நமக்கு கிருபையாய் கொடுக்கப்பட்ட ஆண்டுகளை வீணடித்துக்கொண்டிருக்கிறோம்.

ஆண்டவரும் பொறுமையாக இந்த புதிய ஆண்டிலாவது என் பிள்ளைகள் கனிகொடுப்பார்களா? என்று ஆவலோடு எதிர்பார்க்கிறார். தேவனுடைய எதிர்பார்ப்பை நாம் பூர்த்தி செய்ய வேண்டுமென்றால், தேவனுடைய பக்கத்திலிருந்து, தேவனுடைய துணையோடு, தேவனுடைய ஆவியினால் இந்த புதிய ஆண்டு ஆரம்ப முதல் இறுதிவரை வழிநடத்தப்பட வேண்டும். நதியோரத்திலுள்ள தோட்டத்தைப்போல எப்பொழுதும் செழிப்பாக நம் வாழ்க்கை இருக்கவேண்டுமென ஆசைப்படுகிறோம், ஆனால் தேவனுடைய ஜீவநதியான பரிசுத்த ஆவியானவர் பக்கத்திலிருந்து வாழ்க்கையைப் பார்க்க தவறுவதால், அவரது இசைந்து வாழப்பழக்கமில்லாததால், ஆவிக்குறிய வரட்சியையே ஆன்மீகவாழ்க்கையில் அனுபவமாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இதற்கெல்லாம் இந்த புத்தாண்டிலே முடிவுரையும் - முற்றுப்புள்ளியும் வைப்போம், புதிய ஆன்மீகம், உங்கள் வாழ்க்கையிலே பொங்கி யெழும்பட்டும், புதிய ஆவிக்குரிய அனுபவங்களை, ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வோமாக. தேவன் உங்களுக்கு உண்டு பண்ணி வைத்திருக்கிற நன்மைகளை இந்த புதிய ஆண்டிலே சுதந்தரித்துக்கொள்ளுங்கள். சவுல் பவுலாக, புதிய சிருஷ்டியாக மாறும் பொழுது சொன்ன வார்த்தை ஆண்டவரே, நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்? (Acts 9:6).

**With this great faith and commitment let us step into the New year 2020, Spirit of the Living God will lead us in a wonderful way to inherit new Blessings.**

இப்படிக்கு உங்கள் ஆயர்,
**Rev. M. Christopher Rajendran**




# Our Mission - Explained

The mission 2020 of CSI Tamil Parish is to Know More about Jesus and Making Jesus Know to the Unknown by our sincere & dedicated efforts. We should find and add Minimum 20 New Members to our Congregation.

It is not only the responsibility of the Church Pastor and the Committee; We as every member/ well-wisher of CSI Tamil Parish- Alain should work towards this Mission to achieve this for HIS Glory.

**Together we can...!!!**

# செயலரிடமிருந்து...

## கிறிஸ்துவுக்குள் எனதருமை உடன் விசுவாசிகளே

கிறிஸ்து நமக்காய் பரிந்து பேசி நமது வாழ்வில் ஓர் ஆண்டை கூட்டியிருக்கிறார்... இந்த சிந்தனையோடு புதிய ஆண்டுக்குள் செல்வோம். சென்ற ஆண்டில் தேவன் நமக்கு செய்தவைகளை நன்றியுடன் நினைவு கூறுவோம். நாம் நினைத்ததற்கும் மேலானவைகளை அவர் செய்தார்...

அவருடைய வழிநடத்துதலை அனைத்து நிலைகளிலும் உணர்ந்தோம்... அவருக்கு கோடான கோடி நன்றி. நமது திருச்சபையில் கிறிஸ்துமஸ் காலங்களில் நடந்த அனைத்து ஆராதனைகளையும் கர்த்தர் நமக்கு ஆசிர்வதித்து தந்தமைக்காக அவருக்கு நன்றி செலுத்துவோம். பண்டிகை நாட்களை தாயகம் சென்று உற்றார் உறவினர்களோடு கழித்த தேவப்பிள்ளைகளை இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். உங்கள் பண்டிகை காலங்களை கிறிஸ்துவுக்குள் சிறப்பாக கொண்டாடி மகிழ்ந்திருப்பீர்கள் என்று நம்பி தேவனைத் துதிக்கிறேன்.

சபை மக்களாகிய உங்க்ள் அயராத ஒத்துழைப்பு, அனுதின ஜெபம் மாதாந்திர பொருளுதவி, ஊழியத்தின் கரிசனைக்காக தேவனை அதிகமாய் துதிக்கிறேன். கர்த்தர் மென்மேலும் உங்களையும் உங்கள் குடும்பத்தார் அனைவரரையும் ஆசீர்வதிப்பாராக. திருச்சபை மக்கள் இன்னும் அதிக உற்சாகத்தோடு அனைத்து ஆலய ஆராதனைகளில் பங்கு பெற்று தேவாசீர்வாதம் பெற்று செல்ல அன்புடன் அழைக்கிறேன். உங்கள் யாவருக்கும் சபை குழுவின் சார்பாக புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

வருஷத்தை நன்மையால் முடிசூட்டுகிறவருடைய தேவாசீர்வாதம், தேவ கிருபை உங்களையும் உங்கள் குடும்பத்தையும் நிரப்புவதாக.

இப்படிக்கு
அன்புடன் கிறிஸ்துவின் பணியில்
S. சுரேஷ் ராஜன்

# திருமறை தியானப்பகுதி




**"The Lord your God is among you; He is mighty to save. He will rejoice over you with gladness; He will quiet you with His love; He will rejoice over you with singing."**
**Zephaniah 3:17**

இந்த புதிய ஆண்டின் வாக்குத்தத்தத்தை விசுவாசத்தோடும், நம்பிக்கையோடும், நன்றிபொங்கும் நெஞ்சங்களோடும் ஏற்றுக்கொள்வோம். செப்பனியா ஒரு சிறிய தீர்க்கதரிசிகளில் ஒன்பதாவது தீர்க்கதரிசி, யூதாவின் யோசியா காலத்தில் (641-612 BC) கடுமையாக தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பற்றியும், கர்த்தருடைய நாளைப்பற்றியும் பிரசங்கம் செய்து யோசியா ராஜாவின் மனமாற்றத்திற்கும், அவருடைய ஆன்மீக சீர்திருத்தத்திற்கும் வித்திட்டவர். ஆதலால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு சற்று தள்ளிப்போடப்பட்டது.

இந்தவொரு நம்பிக்கையற்ற சூழலில்தான் இருளின் பின் வெளிச்சம் வருவது போல, தேவனுடைய கோபத்திற்குப்பின், நியாயத்தீர்ப்பிற்குப்பின் தேவஜனங்களை நிர்மூலமாக்குது தேவனுடைய நோக்கமல்ல, மாறாக அவர்களுக்கு நம்பிக்கையளிக்கும் புதிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாக வாக்களித்து அவர்களை திரும்ப உயிர்ப்பித்து, திரும்ப கட்டியெழுப்புகிறார். இந்த Spectacular Promise of God தான் நமக்கும் நம்முடைய நம்பிக்கையற்ற இன்றைய சூழலிலே நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த புதிய வாக்குத்தத்தம் நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் கட்டியெழுப்புவதாக!

தேவன் எல்லா காலத்திலும் மனதுருக்கமுள்ள மன்னிக்கிற தேவனாகவே இருக்கிறார். ஆனால் நாம் செய்த பாவங்களை உணர்ந்து,தாழ்த்தி, மனந்திரும்புகிறதேற்ற கனிகளை யோசியா ராஜாவைப்போலக் கொடுக்கும் பொழுது இப்படிப்பட்ட உன்னதமான வாக்குத்தத்தங்களை தந்து நம்மை கட்டி எழுப்புகிறார். தேவனுடைய மக்கள் செய்த தவறுகள்:

**Zephaniah 3:2a-b failure to conform to the word of God.**


**3:2c-d A failure to live in the fellowship of God.**

**Four things are missing in their bond with God: 3:2a attention, 3:2b submission, 3:2c reliance and 3:2d fellowship. Their relationship with God was broken. So, in 3 chapters full of God's wrath and judgement but at the end there is a great shift in God's dealing with the people.**

**One-way God demonstrates His love for us is forgiveness. If we confess our sins ,He is so faithful and just to forgive our sins and cleanse us from all unrighteousness. In Newcastle testament Lord Jesus is embodiment of love and forgiveness. So, with this great confidence let us inherit this New year promise with repentance and hope.**

ஆதலால் 3:14ல் சீயோன் குமாரத்தியே, கெம்பீரித்துப்பாடு, மகிழ்ந்து களிகூரு. கர்த்தர் உன் ஆக்கினைகளை அகற்றி, உன்னுடைய சத்துருக்களை விலக்கினார்; இஸ்ரேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்; இனத்தீங்கைக் காணாதிருப்பாய். வசனம் 17ல் மறுபடியும் சொல்கிறார் கர்த்தர் உன் நடுவிலிருக்கிறார். **The Lord your God is with you; He is mighty to save you,(kind of mighty warrior in old testament and crucified Savior in New testament destroyed Satanic and Evil forces).** வல்லமை படைத்த கர்த்தராகிய இயேசுவை இம்மானுவேலராக நம்மோடு இருக்கிற படியினால், அவர் நம்மை எப்பொழுதும் இரட்ச்சித்துக்கொண்டேயிருக்கிற படியினால், மகிழ்ந்து களிகூறு. மேலும் அவரும் உன்னுடைய பயபக்தியை, கீழ்ப்பகுதி, அர்ப்பணிப்பு, ஆராதனையை, ஊழியங்களைக் கண்டு என்ன செய்கிறார்?

கர்த்தராகிய இயேசுவை உன்னைக்குறித்து, உன்னுடைய அன்பைக்குறித்து களிகூறுகிறார்! ஆச்சரியமான சத்தியம்! அவர் உன்னைக் குறித்துப் பாடுவார், பாடி மகிழ்வார்! நாம் எவ்வாறு கர்த்தரை பாடி மகிழ்கிறோமோ! அவர் நம்மைக் குறித்து, நமதன்பைக்குறித்துப் பாடிமகிழும்படியான ஒருவாழ்க்கையை இந்த புத்தாண்டிலே வாழ்ந்தால் நாம் எல்லாவிதமான ஆசீர்வாதங்களை நிச்சயமாக சதந்தரித்துக்கொள்வோம்.



# மத்தேயு எழுதின சுவிசேஷம் - சொல் பொருள்

| எண் | சொல் | பொருள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | தூற்றுக்கூடை | முறத்தை விடச் சற்று நீளமாகவும் வாய்ப்பகுதி குறுகலாகவும் உள்ள ஒரு முறம் | 3:12 |
| 2 | பதர் | உள்ளீடற்ற (நெல்) மணி, பயனின்மை | 3:12 |
| 3 | பரிச்சேதம் | துண்டித்தல், வரைமுறைப்படுத்துதல், பகுத்தல் | 5:34 |
| 4 | சற்குணம் | நல்லியல்பு, உயர்பண்பு, பெருந்தன்மை | 5:48 |
| 5 | வசனி | பேசு, உரையாடு, பேசுதல் | 6:7 |
| 6 | ஆயத்துறை | சுங்கச் சாவடி | 9:9 |
| 7 | இரட்டு | சாக்கு உடை | 11:21 |
| 8 | ஆவேசம் | உணர்ச்சி வசப்பட்ட நிலை | 14:26 |
| 9 | சந்திரரோகி | வலிப்பு நோய் | 17:15 |
| 10 | தயாளம் | அருள், இரக்கம், பரந்த மனப்பான்மை, பெருந்தன்மை | 20:15 |
| 11 | வன்கண் | இரக்கமின்மை, கொடுமை | 20:15 |
| 12 | காப்புநாடா | வேதாகம வாசகப்பட்டை | 23:5 |
| 13 | தொங்கல் | அங்கியின் குஞ்சம் | 23:5 |
| 14 | சிங்காரி | அலங்கரி, ஒப்பனைசெய் | 23:29 |
| 15 | வெள்ளைக்கல் பரணி | படிகச் சிமிழ் | 26:7 |
| 16 | எத்தனமான | தகுந்த, ஆயத்தமான | 26:12 |
| 17 | லேகியோன் | 6000 போர்வீரர்கள் கொண்ட கூட்டம் | 26:53 |
| 18 | தூஷணம் | அவதூறு, பழி, நிந்தை, தீங்கு | 26:65 |
| 19 | பிரயத்தனம் | முயற்சி, விரைசெயல், பெருமுயற்சி | 27:24 |

**உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால், என் துக்கத்திலே அழிந்துபோயிருப்பேன்.**

# பைபிளைத் துளைத்த அம்பு



அந்தமான் சென்டினல் தீவில் தடை செய்யப்பட்ட பழங்குடியினர் பகுதிக்கு படகு மூலம் சென்ற அமெரிக்கர் ஜான் ஆலன் சாவ் (26) அங்கு வாழும் பழங்குடியினரால் அம்பு எய்து கொல்லப்பட்டார்.

அவர் ஒரு மிஷனரி. “ஜான் ஆலனின் நோக்கம் அத்தீவின் பழங்குடியினரிடம் சுவிசேஷத்தை கொண்டு செல்வதுதான்” என்று அவரது பயணத்தின் கடைசி நாள்களில் அவருடன் தொடர்பில் இருந்த மற்றொரு மிஷனரி கூறியுள்ளார்.

ஜான் ஆலனை அந்த தீவுக்கு அழைத்துச் சென்றதாக 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இன்ஸ்டாகிராமில் அறிக்கை ஒன்றை வெளியிட்ட ஜான் ஆலனின் குடும்பம், அந்தப் பழங்குடியினரை மன்னித்துவிடுவதாக அறிவித்துள்ளது. “ஜான் ஆலன் சாவ் கடவுளையும் வாழ்க்கையையும் நேசித்தார். துன்பத்தில் இருப்பவர்களுக்கு உதவினார். சென்டிலீஸ் பழங்குடிகள் மீது அவருக்கு அன்பைத் தவிர வேறெதுவும் இல்லை” என்று கூறிய அவர்கள், அவர் தமது சொந்த விருப்பத்தின் பேரிலேயே அங்கு சென்றதாகவும், எனவே கைது செய்யப்பட்ட அவரது அந்தமான் நண்பர்களை விடுவித்துவிடலாம் என்றும் கூறியுள்ளனர்.




சென்டினல் தீவில் இருப்பவர்களையும், அவர்களது வாழ்க்கை முறையையும் பாதுகாக்கவேண்டும் என்பதற்காக அந்தத் தீவை நெருங்குவதுகூட தடை செய்யப்பட்டுள்ளது. ஃப்ளூ, தட்டம்மை போன்ற சாதாரண நோய்களுக்கு எதிராகக் கூட அவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி இருக்காது என்பதால் வெளியாட்கள் அவர்களைத் தொடர்புகொண்டால்

அது அவர்களுக்கு மிகப்பெரிய ஆபத்தில் போய் முடியும். இதனால்தான் அவர்களது தனிமை பேணப்படுகிறது.

ஜான் ஆலன் சாவ் இறப்பை ஒட்டி ஒரு போலீசார் ஒரு கொலை வழக்குப் பதிவு செய்தனர். அதில் அடையாளம் தெரியாத நபர்களும், அடையாளம் தெரிந்த ஏழு பேரும் குற்றவாளிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். அந்த ஏழு பேரில் குறைந்தது ஐந்து பேர் ஜான் ஆலனை அந்த தீவுக்கு அழைத்துச் சென்றதாக கைது செய்யப்பட்ட மீனவர்கள் என்று போலீஸ் சொல்கிறது.

இந்தப் படத்தில் சென்டினல் தீவிலுள்ள இந்த கடற்கரையில் அத்தீவின் பழங்குடிகள் பாதுகாப்புக்காக நிற்பதைப் பார்க்கலாம்.



எந்த இடத்தில் இந்த சம்பவம் நடந்தது என்பதைக் கண்டறிவதற்காக அதிகாரிகள் ஒரு ஹெலிகாப்டரையும், கப்பலையும் அந்தப் பகுதிக்கு அனுப்பியுள்ளனர்.

“அந்த தீவில் இருந்து குறிப்பிட்ட தொலைவில் நிற்கிறோம். ஆனால், இன்னமும் ஜான் உடலை கண்டுபிடிக்க முடியவில்லை. அதற்கு இன்னமும் சில நாட்கள் ஆகலாம்” என்று ஏ.எஃப்.பி. செய்தி முகமையிடம் கூறியுள்ளார் அந்தமான் நிக்கோபர் தீவின் தலைமை இயக்குநர் தேவேந்திர பதக்.

நிலைமையை எப்படி எதிர்கொள்வது என்பதில் உதவுவதற்கு அவர்கள் மானுடவியலாளர்கள், வனத்துறை அலுவலர்கள், பழங்குடி நல அலுவலர்கள் உள்ளிட்ட கள வல்லுநர்களின் உதவியை போலீசார் நாடியுள்ளனர். எவ்விதத்திலும் அவர்களையோ, அவர்களது வாழ்விடத்தை

‘யோ தொந்தரவு செய்துவிடக்கூடாது என்பதில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது என்று தேவேந்திர பதக் கூறியுள்ளார்.

அந்தமான் சென்ற பிறகு தொலை தூரத்தில் உள்ள வட சென்டினல் தீவுக்கு சில மீனவர்களை அழைத்துக்கொண்டு ஒரு படகில் சென்ற ஜான் தீவினை நெருங்கியவுடன், ஒரு சிறு படகில் தனியாக அந்தத் தீவின் கரையை அடைந்ததாகவும், கரையில் கால் வைத்த உடனேயே பழங்குடியினர் அவரை வில் அம்பு கொண்டு தாக்கியதாகவும் அவருடன் சென்ற மீனவர்கள் தெரிவித்தனர்.

**பைபிளைத் துளைத்த அம்பு** அந்த தீவை நோக்கி தாம் மேற்கொண்ட முந்திய பயணம் ஒன்றின்போது அவர் **“என் பெயர் ஜான், நான் உங்களை நேசிக்கிறேன், இயேசு உங்களை நேசிக்கிறார்”** என்று அவர் பழங்குடிகளைப் பார்த்து கத்தியதாகவும், **ஒரு பழங்குடி எறிந்த அம்பு அவரது பைபிளை துளைத்ததாகவும்** வாஷிங்டன் போஸ்டில் வெளியான கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தமது குடும்பத்துக்கு அவர் எழுதிய கடைசி குறிப்பில், **“நான் கிறுக்கன் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால், இயேசுவை அந்த மக்களுக்கு பிரகடனப்படுத்துவது அவசிய’ மானது என்று நான் நினைக்கிறேன்”** என்று குறிப்பிட்ட அவர், ‘கடவுளே நான் இறக்க விரும்பவில்லை’ என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கத்தரிக்கோல், ஊக்கு பின், கால்பந்து ஆகியவற்றை ஜான் அந்த பழங்குடியினருக்கு பரிசளிக்க எடுத்துச் சென்றதாக பெயர் வெளியிட விரும்பாத ஒருவரை மேற்கோள் காட்டி ராய்டர்ஸ் நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

இயேசுவின் ராஜ்ஜியத்தை அந்தத் தீவில் நிறுவவே இப்படிச் செய்வதாகவும், தாம் கொல்லப்பட்டால் பூர்வகுடிகளை குறை சொல்லவேண்டாம் என்றும் அவர் கூறியதாக, அந்த பெயர் வெளியிட விரும்பாத நபர் தெரிவித்துள்ளார்.

# "கானானுக்குள் பிரவேசித்தல்"

ஓர் பழைய ஆண்டை முடித்து புதிய ஆண்டுக்குள் பிரவேசிக்கிற நாம், பழைய ஆண்டின் கசப்பான அனுபவங்களை மறந்து பதிய உற்சாகத்தோடும் நம்பிக்கையோடும் புதிய ஆண்டுக்குள் அடியெடுத்து வைப்போம். எகிப்து தேசத்தின் அடிமைத்தன வாழ்விலிருந்து விடுதலை வாழ்வினை சுதந்தரித்து கொள்ளும் படியாய் கானானை நோக்கி "பறப்பட்டு போங்கள் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லு."(யாத். 14:15) என்று மோசேயின் மூலம் சொன்ன வண்ணமாய் இன்று நம்மையும் அழைக்கிறார்.

கொடும் வறுமையிலிந்து தப்பித்துக்கொள்ள எகிப்தில் சென்று குடியேறிய மக்கள் கூட்டம் இஸ்ரவேலர். இவர்கள் அடிமைகளாக பணியை செய்து தங்கள் தலைவர்களின் வளர்ச்சிக்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் உழைத்து பிழைத்து வந்தனர். இவ்வேளையில் தேவன் தமது ஜனத்தின் அடிமைத்தன வாழ்விலிலுந்து அவர்களை விடுவிக்கும் முகமாய் மோசேயை ஆயத்தப்படுத்தினார்.

மோசேயிடம். "எகிப்திலிருக்கும் என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, ஆளோட்டிகளின் நிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டேன், அவர்கள் படுகிற வேதனையையும் அறிந்திருக்கிறேன். ஆவர்களை எகிப்தியரின் கைக்கு விடுதலையாக்கவும், அவர்களை அந்தத் தேசத்திலிருந்து நீக்கி, கானானியரும் ஏத்தியரும் எமோரியரும் பெரிசியரும் ஏவியரும் எபூசியரும் இருக்கிற இடமாகிய பாலும் தேனும் ஓடுகிற நலமும் விசாலமுமான தேசத்தில் கொண்டு போய் சேர்க்கவும் இறங்கினேன். (யாத். 3:7-8) என எகிப்தில் தம் மக்கள் படும் அவலங்களை விளக்கி அழைத்தார்.

எகிப்திலிருந்து புறப்பட்டு வந்த இஸ்ரவேலர், தங்களுக்குப் பின்னால் எகிப்தியர்களையும் முன்னால் கடலையும் மற்ற திசைகளில் மலைகளையும் கண்டு திகைத்து மோசேயிடம் "நாம் திரும்பி போவோம்" என்கின்றனர். தேவன் அவர்கட்கு வைத்திருக்கிற ஆசீர்வாதங்களை அறியாது தங்களை சுற்றி இருக்கிற உலக காரியங்களைப் பார்த்து திகைத்து பின் வாங்க எத்தனிக்கின்றனர். அது மட்டுமல்லாது கானான் சென்றடையும் வரையுள்ள பயணத்தை நாம் வேதத்திலே பார்க்கும் போது அனேக வேளைகளில் ஆணடவருடைய சித்தத்திற்கு எதிர்மறையாக இஸ்ரவேல் ஜனங்கள் செயல்பட்டதை நாம் காண்கிறோம்.

நமது நிலமை என்ன? புதிய வருடத்தில் வரும் சவால்களை மேற்கொள்ளவும் புதிய ஆசீர்வாதங்களை அடைந்து கொள்ளவும் பின்னோக்கித் திரும்பாது முன்னேறுவோமா? யோசுவாவிற்கு "நான்

மோசேயோடே இருந்தது போல, உன்னோடும் இருப்பேன் நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை” (யோசு. 1:5) என்று கர்த்தர் வாக்களித்து நடத்தியதைப் போல புதிய ஆண்டிற்குள்ளாக “புறப்பட்டுப் போங்கள்” என்று நம்மை நோக்கியும் உரைக்கிறார்.

அவருடைய சத்தத்திற்கு கீழ் படிந்து ஒவ்வொரு நாளும் நடப்போம். முன்னேறிச் செல்லுவோம். வாழ்வின் அனைத்து நிலைகளிலும் ஆசீர்வாதங்களை நிறைவாய் பெற்றுக் கொள்வோம்.

**இறை ஆசி நம் அனைவரோடும் வரும் புதிய ஆண்டு முழுவதிலும் நிறைவாய் தங்கியிருப்பதாக.**




**ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20’ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.**

**Your name / Quiz type / Month-Year**

**Church Email:**

**csitcalain@gmail.com**

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகள்/உங்கள் பெயர் விடுபட்டிருந்தால்; அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

# தரித்திரரை நினைவுகூருங்கள்



பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகிய மூவரும் பவுலிடம் ஒரு கோரிக்கையை வைத்தார்கள். அதாவது தரித்திரரை நினைத்துக் கொள்ளும்படி வேண்டிக் கொண்டார்கள். தரித்திரரை நினைத்து உதவ வேண்டும் என்பதை பழைய ஏற்ப்பாட்டிலேயே தேவன் கட்டளையிட்டுள்ளார் (உபா. 15:7-8). அப்போஸ்தலர்களும் தங்களது ஊழியத்தின் மத்தியில் தரித்திரருக்கு உதவி செய்தார்கள் (அப். 6:1-6). சுவிசேஷத்தை பிரசிங்கிப்பதோடு நின்றுவிடாமல். ஏழைகளையும் மனதில் வைத்திருந்தார்கள். இப்படித் தரித்திரத்தில் உள்ள விசுவாசிகளை நினைத்துக் கொள்ளும்படி பவுலையும் பர்னபாவையும் வேண்டிக்கொண்டார்கள்.

“நானும் கருத்துள்ளவர்களாயிருந்தேன்” என பவுல் கூறுகின்றார். அப்போஸ்தலர்கள் மூவரும் பவுலிடம் கூறினபடியால் மட்டுமே பவுல் தரித்திரத்தை நினைக்கவில்லை. அவர்கள் கூறுவதற்க்கு முன்னமே பவுலின் மனதில் தரித்திரர்கள் இருந்தார்கள். காரணம் உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டாகும் என்று பரிசுத்த ஆவியானவர் சீஷர்களுக்கு வெளிப்படுத்தியிருந்தார் (அப். 11:27-30). ஆதற்காக பணமும் சேகரித்தார்கள். பவுல் இதைக்குறித்து தெளிவாக கூறியுள்ளார். (1 கொரி. 16:1). தரித்திரத்தில் உள்ள விசுவாசிகளுக்காக மற்ற சபை விசுவாசிகள் தங்களால் இயன்றதை சேர்த்து வைக்கும்படி பவுல் கூறுகிறார் (1 கொரி. 16:1).

தர்ம பணத்தை சேகரிக்கும் ஊழியத்தில் தீத்து நன்றாக செயல்பட்டான் (2 கொரி. 8:6). தர்ம பணத்தை சேகரிக்கும்படி மற்ற சீஷர்களையும் பவுல் அனுப்பினார். (2 கொரி. 9:1-5). இந்த தர்ம பணத்ததை அவனவன் தங்கள் மனதில் நிச்சயித்தபடியும் திறமையின் படியும் கொடுக்கும்படி பவுல் கேட்டுக் கொண்டார் (2 கொரி. 9:7). அன்று இந்த வசனங்களை சரியாக புரிந்து கொள்ளாமல் ஏழைகளிடமிருந்தும் கட்டாயமாக தங்களுக்கென காணிக்கை தசமபாகங்களென வசூவிக்கும் இன்றைய ஊழியர்கள் ஏராளம். வேத

வகனங்களை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி சபைகளை கொள்ளையிடுபவர்களும் உண்டு.

ஊழியபாதையில் ஏழைகளை நினைத்து உதவவேண்டும். சபையில் வருகிற வருமானத்தை வீணான கூட்டமைப்புகளுக்கு செலவிடாமல். சபைகளிலுள்ள ஏழை எளிணவர்களையும் ஆதரிக்கலாமே. உண்மையான தேவ ஊழியன் ஏழைகளையும் நினைத்து ஆதரிப்பான். காரணம் அது தேவனுடைய கட்டளை ஆயிற்றே. ஏழைகளுக்கு உதவுகிறோம் என்ற பெயரில் சொத்து குவிக்கும் ஊழியர்கள் இன்று எத்தனைபேர்? அன்றாட வாழ்வில் கஷ்டப்படும் ஏழைகளிடம் காணிக்கை வாங்குபவர்கள் அனேகம் இருக்கிறார்கள்.

அன்பானவர்களே! ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான் என்ற வசனத்தின்படி வருகின்ற நாட்களில் தரித்திரரை நினைத்து புதிய ஆண்டில் அடியெடுத்து வைப்போம். அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

**நெல்சன் சோபித ராஜ்.**




**சிறுவர் வேதாகம வகுப்பு'ல் ஆசிரியர்களாக சேர்ந்து ஊழியம் செய்ய விரும்புவோர் நீங்கள் போதகர், அல்லது திருமதி. ஜெயின் ராஜவேல் அவர்களை தொடர்பு கொள்ள உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.**






# Indian Christian Contributions to Space



**Dr. S. Christopher:** Indian scientist who currently serves as Chairman of the Defence Research & Development Organisation (DRDO) India. **<u>Creator of India's first indigenous Advanced Aircraft AEW&C system</u>.** Formerly he was **director of the Centre for Airborne Systems, India.**

**Dr. George Koshy:** Mission Director, PSLV-C11, Chandrayaan-1, India's successful Lunar Mission 2008. **<u>Dr. Koshy was the man behind India's 1st indigenous Lunar mission that put the Indian Flag on the Moon's surface</u>**. This mission also helped a NASA equipment discover the presence of water on the Moon.

**Dr. Tessy Thomas**: India's current top **"Missile Woman"** and #1 ranked Defence technology Scientist in India. **She is the creator of the highly successful premium Nuclear Indian missiles - Agni-4 and India's 1st indigenous Long-Range ICBM (Intercontinental Ballistic Missile)**

**program - AGNI-5**. She is widely considered as one of the few women scientists in the world working on advanced nuclear missile systems.

**Dr. T. K. Alex**: Fmr Director ISAC (ISRO Satellite Centre). **Pioneer of both Chandrayaan (Moon Mission) & Mangalyaan (Mars Mission) for India**. Chairman of Scientific & Tech Committee - Mars Orbiter Mission 2013. Pioneer in India's Advanced Space Satellite Technology.

**Dr. George Joseph**: Considered the **"Father of Remote Sensing Satellite Imaging Technology in India".** Honorary Distinguished Professor, ISRO. He has taken charge as the Director of the United Nations affiliated Centre for Space Science and Technology Education in Asia and the Pacific (CSSTEAP).

## Glory to God Almighty






கிறிஸ்துவுக்குள் அன்பான உடன் விசுவாசிகளே...
கர்த்தர் உங்கள் வாழ்க்கையிலே செய்த அற்புதங்களை நீங்கள் சாட்சியாக தெரியப்படுத்த விரும்பினால்; நீங்கள் அதை எழுதி அனுப்புங்கள்/தெரியப்படுத்துங்கள். கர்த்தருடைய நாம மகிமைக்காய் அது வெளியிடப்படும்.

**Mr. Ravindra / Testimony 13th December 2019**

ALL GLORY TO LORD GOD ALMIGHTY!

I thank God for this opportunity that he has given me to share my testimony of His Grace and Mercy to me and my family.

My name is Ravindra a Hindu, I got to know about Jesus Christ through my wife after my marriage.

Recently I had an emergency call from my parents back home in India; my mother (Ms. Ramani) developed breathing problems and had to be rushed to ICU in a critical condition. I was also informed that the doctors at the Hospital wanted to perform some medical procedure while in the ICU, which could cause internal organs failure of her critical condition, we informed our church immediately and reached to our family and friends to pray for my mother.

***Psalms 50:15 "Call upon Me in the day of trouble; I will deliver you, and you will honor Me."***

My hope and trust in the Almighty Lord Jesus made me stand strong by faith, even though my parents do not know the Lord Jesus yet, I prayed to the Lord to be merciful and kind and heal my mother. This could be God's chosen time for her to encounter the Lord.

Even at the Hospital our Gracious Lord made us meet Doctors and Nurse who stood by faith and encouraged us to believe in prayer because we have a prayer answering God. When I met my mother, I told her personally to trust Lord Jesus

who will save us, and I believe that my mother too prayed to the Lord even though she would not acknowledge.

I continued to stand by faith and pray for my mother's wellbeing. He is a loving father who will never ever put his children to shame.

***Psalms 25:3a No one who hopes in you will ever be put to shame.***

My Lord God Almighty healed my mother from that critical condition and she was moved to the normal ward within 5 days.

***Jeremiah 29:11 For I know the plans I have for you," declares the Lord, "plans to prosper you and not to harm you, plans to give you hope and a future.***

I request you all to continue to pray for my family here and my parents and extended family in India who do not know the Lord yet. I believe the Lord would help us to stand united as a family together in faith, be the Salt and Light for Him wherever He has placed us for His Glory.

**Mr. Suresh Rajan / Testimony 13th December 2019**

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாவதாக. நான் நிற்பதும் நிர்மூலமாகாததும் தேவ கிருபையே. இந்த நாள் மட்டும் சுகம் பெலன் தந்து காத்து வந்தார்; திருச்சபையின் பணிகளை செய்வதற்கு கர்த்தர் தந்த ஞானத்திற்காகவும் கிருபைக்காகவும் நன்றி செலுத்துகிறேன். அனேக நெருக்கடிகளின் மத்தியிலும், இக்கட்டான சூழ்நிலைகளிலும், ஒன்றும் இல்லாத நேரங்களிலும் கூட கர்த்தர் பயமில்லாமல் வாழ்வதற்கு கர்த்தர் கிருபை செய்தார் அதற்காக அவருக்கு கோடான கோடி நன்றி செலுத்துகிறேன்.

**Mrs. Augusta Lawrence / Testimony 13th December 2019**

இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமம் மகிமை படுவதாக. என்னுடைய அண்ணன் மகன் திடீரென்று ஒரு விபத்துக்குள்ளானதில் பேருந்து அவன் காலில் மீது ஏறி; பலத்த காயம் ஏற்பட்டது. நாங்கள் மிகவும் வருத்ததோடும் பாரத்தோடும் ஜெபித்தோம். நம்முடைய பெண்கள் ஐக்கிய சங்க ஜெபகுழுவிலும் இதற்காக ஜெபித்தோம். கர்த்தர் ஜெபத்தை கேட்டு; அவனுக்கு சீக்கிரமாய் அது குணமாக கிருபை செய்திருக்கிறார்.கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

# பாடல் பிறந்த கதை




## கர்த்தருடைய மகிமை
### அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது

1. ராக்காலம் பெத்லேம் மேய்ப்பர்கள்
தம் மந்தை காத்தனர்
கர்த்தாவின் தூதன் இறங்க
விண் ஜோதி கண்டனர்...

2. அவர்கள் அச்சங்கொள்ளவும்
விண் தூதன் திகில் ஏன்?
எல்லாருக்கும் சந்தோஷமாம்
நற்செய்தி கூறுவேன்

3. தாவீதின் வம்சம் ஊரிலும்
மெய் கிறிஸ்து நாதனார்
பூலோகத்தார்க்கு ரட்சகர்
இன்றைக்குப் பிறந்தார்

4. இதுங்கள் அடையாளமாம்
முன்னணைமீது நீர்
கந்தை பொதிந்த கோலமாய்
அப்பாலனைக் காண்பீர்

5. என்றுரைத்தான் அக்ஷணமே
விண்ணோராம் கூட்டத்தார்
அத்தூதனோடு தோன்றியே
கர்த்தாவைப் போற்றினார்

6. மா உன்னதத்தில் ஆண்டவா
நீர் மேன்மை அடைவீர்
பூமியில் சமாதானமும்
நல்லோர்க்கு ஈகுவீர்

புரோடெஸ்டென்ட் கிறிஸ்தவ சபை உருவான 16'ம் நூற்றாண்டிலிருந்து 18'ம் நூற்றாண்டு வரை திருச்சபையின் பாடல்கள் அனைத்தும் "ஸ்டெர்ன் உறால்ட் உறாப்கின்ஸ் சால்ட்டர்" என்ற சங்கீதங்களின் அமைப்பில் பாடப்பட்டன. இப்பாடல்கள் கரடுமுரடான அமைப்பாக இருந்ததால், அவற்றை பாடுவது கடினமாக இருந்தது. எனவே சங்கீதங்களை நவீன முறையில் மாற்றியமைத்து; எளிதில் பாடும்படி அமைக்க, 1696'ம் ஆண்டு இங்கிலாந்தின் அரசவைக் கலைஞர்களான நாகூம் டேட்டும், நிக்கோலஸ் பிராடியும் முயற்சி எடுத்தனர்.

கடும் எதிர்ப்புகள் மத்தியில் வில்லியம் அரசனின் ஆதரவுடன், இப்புதிய அமைப்பு சங்கீதங்கள் இங்கிலாந்து திருச்சபையில் உபயோகப்படுத்தப்பட்டன. இதைத் தொடர்ந்து 1700' ம் ஆண்டு சங்கீதங்களின் மற்றொரு துணை தொகுப்பையும் வெளியிட்டனர் இத்தொகுப்பில் சங்கீதங்களை தவிர, 16 பாடல்களையும் அறிமுகம் செய்தனர். இவற்றில் இப்பாடலும் ஒன்று.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள வேத பகுதியில் வரும் தேவ தூதர் மேய்ப்பர்களுக்கு இயேசு பிறந்த நற்செய்தியை அறிவிக்கும் சம்பவத்தை; எளிய நடையில் கிறிஸ்மஸ் கீதமாக இப்பாடலில் எழுதினார்கள் மற்றப் பாடல்களனைத்தும் காலத்தால் அழிக்கப்பட்டுப் போயினும்; இந்த கிறிஸ்மஸ் பாடல் பல நூற்றாண்டுகளாக கிறிஸ்துமஸ் தரும் உண்மையான மகிழ்ச்சியை சுட்டிக்காட்டும் பாடலாக விளங்குகிறது.

நாகூம் டேட் 1652 ஆம் ஆண்டு அயர்லாந்தைச் சேர்ந்த டப்ளினில் வாழ்ந்த போதகரின் மகனாகப் பிறந்தார். லண்டனின் திருத்துவ இசைக் கல்லூரியில் படித்துத் தேறினார். 1690'ம் ஆண்டு "இங்கிலாந்து தேசப் புலவர்" என்ற சிறப்புப் பட்டமும் பெற்றார். ஆனால் அவரது குடிப்பழக்கமும் ஊதாரிதனமான செயல்களும் அவரது வாழ்வை கெடுத்தன. இறுதியில் 1715'ம் ஆண்டு லண்டனில் ஒரு கடன்பட்டோரின் இல்லத்தில் பரிதாபமாக மரித்தார். அவருடைய உற்ற நண்பரான பிராடியோ, தன் வாழ்நாள் முழுவதும் போதகராக ஆண்டவருக்கு சேவை செய்தார். இப்பாடலுக்கு; புகழ்பெற்ற ஜார்ஜ் ப்.ஹேண்டல் இராகம் அமைத்தார்.

## Parents Connect

**Bible Story:** Jesus Calmed the Storm (Luke 8:22-25)
**Bible Phrase:** "Even the winds and the waves obey Jesus" (Matt. 8:27).
**Bible Truth:** Jesus was not an ordinary man. Because Jesus was God's Son, He could do amazing things.

### God's Unfolding Story

1. God created everything
2. People disobeyed God.
3. God chose a special people.
4. **God sent Jesus to help us.**
5. Jesus began the Church.
6. Jesus is preparing heaven for us.




### Unfolding God's Story For Parents

This month, we cover some of the most exciting stories from the ministry of Jesus. Kids love today's story. Just as the disciples were amazed at Jesus' power over the elements, your preschooler will be amazed that Jesus could calm a raging storm with His words! Share your amazement with your preschooler.

Begin this conversation by asking your preschooler, "Have you ever wished you could change the weather? Sometimes, wouldn't you like to make it sunny instead of rainy?"

Explain: "People do not have the power to change the weather, but in today's story we will find out about a time when Jesus changed the weather."

Tell the story.

Ask: "What did Jesus do in the story that was amazing?" Later in the week, share the story again during bath time. Talk about how amazed the disciples were with Jesus and His power over the wind and the waves.

Share the Bible Phrase and pray—with your preschooler all through the week.



### Bible Story
**Jesus Calmed the Storm**

Jesus had spent all day teaching the people beside the Sea of Galilee. It was almost night time, and Jesus said to His disciples, "Let's cross over to the other side of the lake."

So the disciples began to row to the other side. Jesus was probably tired from His day of teaching as He fell asleep in the boat. Suddenly, a great storm came up, and the waves begin to grow larger. The winds were so strong that the boat was being tossed wildly over the lake. Water was coming into the boat. The disciples were terribly afraid! They knew a great wind could tear the boat apart. The men probably rowed with all their strength to try to get to the shore.

Finally, the disciples decided to wake Jesus. They called out saying, "Master, we are going to die!"


Jesus of course woke up and saw how afraid His friends were because of the storm. Jesus calmly got up and said, "Peace be still." The wind stopped blowing, and the waves became quiet and still. The disciples said to each other, "Wow, even the winds and waves obey Him." The disciples were amazed at what Jesus did that day.

### Activity Suggestion

Help your preschooler experience the story. Get a box for a boat, a fan for the wind, some spray bottles of water for the rain and waves. You can help your preschooler decorate his or her box boat with as much detail as time allows. Add a sheet for a sail and a spatula for a paddle. Tell the story repeatedly, but this time using the wind and waves to experience the storm.

This can be a very memorable story for your preschooler.

# Kids Coloring (Kinder & Beginner)








Dear Kids... Write your name... here...

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

## Spot the Differences in David and Goliath

Compare the picture on the top with the picture on bottom. Circle the 13 things that are different.





**Your Name Here:**

# Thankful for God Giving Me What I Need
## Secret Code

Each number stands for a letter of the alphabet. Write the correct letter in the blank to find the coded words and phrase.

## Deuteronomy 11:13-15

**Code key**

| | | |
|---|---|---|
| A 1 | J 10 | S 19 |
| B 2 | K 11 | T 20 |
| C 3 | L 12 | U 21 |
| D 4 | M 13 | V 22 |
| E 5 | N 14 | W 23 |
| F 6 | O 15 | X 24 |
| G 7 | P 16 | Y 25 |
| H 8 | Q 17 | Z 26 |
| I 9 | R 18 | |

__ __
8 5

__ __ __ __ __ __ __ __
16 18 15 22 9 4 5 19

__ __ __ __
23 8 5 14

__ __   __ __ __
23 5   1 18 5

__ __ __ __ __ __ __ __ .
15 2 5 4 9 5 14 20

**You can be thankful because of God's**

__ __ __ __ __ __ __ __ __
16 18 15 22 9 19 9 15 14

Your name Here….

# Bible Cross Word (Primary & Above)

## Paul and His Friends Taught About Jesus Crossword Puzzle




### ACROSS

2. City where Paul met Aquila and Priscilla
3. When Paul left Corinth, this man went with him.
4. Paul worked with Aquila and Priscilla to make these.
7. People who like and help each other
8. Paul stayed in Corinth for one year and _______ months.

### DOWN

1. While he was in Corinth, Paul ___________ to the people.
5. To go from one place to another
6. Aquila's wife




*Your Name Please…*

**(Primary & Above)**

# Joseph and His Family
# Word Search

Find the words on the list that are hidden in the puzzle. The words can be left to right, up and down, or diagonally.

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| J | A | C | O | B | M | B | L | O | R | S | I | T | E | I |
| S | U | M | I | N | E | E | R | R | E | T | A | T | V | S |
| L | I | S | I | T | N | N | L | O | A | F | J | C | I | R |
| J | U | D | A | H | I | J | U | A | T | U | O | R | I | A |
| L | O | R | E | R | S | A | C | T | E | H | S | I | T | E |
| N | U | L | P | A | M | M | O | N | S | E | E | U | I | L |
| N | O | N | H | E | Q | I | I | S | C | I | P | R | A | N |
| D | R | E | A | E | L | N | X | E | R | I | H | I | S | R |
| L | A | O | R | E | M | O | L | O | R | S | I | T | E | R |
| S | U | F | A | T | H | E | R | R | S | E | G | Y | P | T |
| I | T | N | O | A | T | B | H | E | N | I | S | M | O | D |
| T | I | O | H | C | A | N | A | A | N | I | M | M | V | E |
| L | A | I | Q | U | A | T | N | O | N | S | E | E | T | E |
| T | U | E | D | O | L | O | R | E | D | E | L | I | O | U |
| F | A | M | I | L | Y | F | E | U | G | A | I | T | V | N |

| | | |
|---|---|---|
| BENJAMIN | FAMILY | JOSEPH |
| BROTHERS | FATHER | JUDAH |
| CANAAN | ISRAEL | SIMEON |
| EGYPT | JACOB | PHARAOH |

Your Name Here...




## Kids who did the Coloring & Finding Route

Crasslin Devona / Reagan Shan / Johan Sanjo
Eion Jaden /Jason Eric / Jonathan
Ieremiah / Jemima / Hartlyn Herchil
Rishon Yojit / Ridhun Yojit

## Kids who did the Missing Letters

Shelbino / Jason Eric / Eric Jayden
Johan Sanjo / Jonathan

## Children who successfully did the Bible Cross Word

Roshan / Shelbino / Dennis / Jason / Jonathan
Eric Jayden / Annlin / Angelin / Joshua

## Children who successfully did Bible Word Search

Roshan / Shelbino / Jason Eric / Jonathan / Jeremiah
Eric Jayden / Ridhun / Joshua

## Children who wrote Children's Quiz Correct Answers:

Roshan / Shelbino / Jonathan / Annlin / Angelin






# வேத வினா-விடை போட்டி

## (தானி: 8–12)

1. இருதயத்தை மயக்குபவைகள் எவை?

2. ஓசியா, சோரஸ்திரீயை சேர்ந்த பின்பு அவளிடத்தில் பெற்ற பிள்ளைகளின் பெயர்கள் என்ன? அந்த பெயர்களின் அர்த்தம் என்ன?

3. தானியேல் முதல் தரிசனத்தில் கண்ட புருஷன் யார்?

4. நீ உன் தேவனுடைய _______________ மறந்தாய், ஆகையால் நானும் _______________ மறந்து விடுவேன்.

5. தானியேல் இரண்டாம் தரிசனம் கண்டபோது எங்கு இருந்தான்?

6. ஓசியா தீர்க்கதரிசனம் உரைக்க தொடங்கியபோது, யூதாதேசத்தை அரசாண்ட ராஜாக்கள் யார்?

7. தானியேல் கண்ட தரிசனத்தில் இரண்டு கொம்புள்ள ஆட்டுக்கடா எது?

8. மேசியா எப்போது சங்கரிக்கபடுவார்?

9. கர்த்தரை தேடும்படி தங்கள் ஆடுகளோடும், தங்கள் மாடுகளோடும் போனவர்கள் யார்?

10. சணல் வஸ்திரம் தரித்தவரும், ஆற்றின் தண்ணீர்களின்மேல் நிற்கிற வருமாகிய புருஷன், இந்த ஆச்சரியமான முடிவு வர எவ்வளவு காலம் செல்லும் என்று சொன்னான்?

**கடந்த மாதத்திற்கான விடைகள்**

1. (எசே 46:13) | 2. (எசே 47:13) | 3. (எசே 48:11)
4. (தானி 1:2) | 5. (தானி 2:15) | 6. (தானி 3:20)
7. (தானி 3:30) | 8. (தானி 4:28)

**Dec'19**
**மாதத்திற்கான விடைகள் எழுதியவர்கள்**

திரு. M.C கிறிஸ்டோபர்

திருமதி. பமீலா டேனியல்

திருமதி. எபென் A. பிரசாத்

திருமதி. ராதிகா செல்வகுமார்

திருமதி. ஜெயின் ராஜவேல்

திருமதி. பிப்லின் நெல்சன்

திருமதி. சிந்துஜா சதீஷ்

திருமதி. ரோஸ்லின் பாலாஜி

திருமதி. அகஸ்டா லாரன்ஸ்

திருமதி. ஹெப்சிபாய் நேசமணி

திருமதி . ஜோனீஷ் ஹெர்ஷெல்

திருமதி. பெட்ரீஷியா ஜேசன்

திருமதி. ஜெயந்தா ஜாண்



| பிறந்தநாள் ஆசரிப்போர் **Birthday Celebrants** | |
|---|---|
| 2-Jan | Ms. Joshika Vashni D/o Mrs. Shalini |
| 2-Jan | Mr. Prem Jenifer. A |
| 4-Jan | Ms. Rishita D/o Mr. Kannan |
| 4-Jan | Mrs. Helina Santhosh W/o Mr. Santhosh Kumar |
| 8-Jan | Mstr. Roshan S/o Mr. Ravindra |
| 12-Jan | Mstr. Geovin S/o Mr. George Rose |
| 16-Jan | Mstr. Abinesh Solomon S/o Mr. Aruldhas |
| 17-Jan | Mstr. Kevin S/o Mr. Joel Ranjith Kumar |
| 17-Jan | Mr. Antony Jesu Rajan |
| 18-Jan | Mr. John Joseph |
| 19-Jan | Mstr. D.L.Derrik S/o Mr. David Livingston |
| 20-Jan | Mstr. Abishek Solomon S/o Mr. Aruldhas |
| 22-Jan | Mrs. Dhilomina W/o Mr. Ashok Kumar |
| 27-Jan | Mstr. Jonathan Asher S/o Mr. Suresh Rajan |

| திருமணநாள் ஆசரிப்போர் /**Wedding Anniversary** | |
|---|---|
| 05-Jan | Mr. Jayan Dharmaraj & Mrs. Helan Hemabai |
| 07-Jan | Mr. Paul Gnana Prabu. R & Mrs. Nirmala Jeniffer |
| 11-Jan | Mr. Belfer John Sigamony & Mrs. Jeyantha |
| 21-Jan | Mr. C. Havin Heba & Mrs. Jackulin Milka |
| 23-Jan | Mr. David Johnson Premkumar & Mrs. Prema Ruth |
| 30-Jan | Mr. Sathish Kumar. T & Mrs. Sinduja |

**On behalf of CSI Tamil Parish;**

**Wishing you the Best of all on your Special day**



**என்னாலே உன் நாட்கள் பெருகும்; உன் ஆயுசின் வருஷங்கள் விருத்தியாகும்.**

நீதிமொழிகள் 9: 11



# நமது சபை உறுப்பினர்களை தெரிந்து கொள்வோம்

| CSI Tamil Parish Family No: 082 | Mobile no: 055 526 3351 |
|---|---|
| Mr. Paul Gnana Prabhu (Head) |  |
| Mrs. Nirmala Jennifer (Wife) | |
| Location in India:<br>5/2 Muttathur PO, Vilupuram<br>Tamilnadu | |

| CSI Tamil Parish Family No: 085 | Mobile no: 054 450 6988 |
|---|---|
| Mr. Kingsly Stubert (Head) |  |
| Mrs. Shalini Vimala (Wife) | |
| Ms. Joshika Vashni (Daughter)<br>Mstr. Joshua (Son) | |
| Location in India:<br>Beracah Cottage<br>Aalamparai, Nagercoil,<br>K.K. Dist, Tamil Nadu | |

| CSI Tamil Parish Family No: 086 | Mobile no: 050 586 8173 |
|---|---|
| Mr. Suresh Rajan (Head) |  |
| Mrs. Anitha Rajan (Wife) | |
| Mstr. Jonathan Asher (Son)<br>Mstr. Jeremiah Alan (Son)<br>Baby. Jemima Ashni (Daughter) | |
| Location in India: Bethel<br>Vettoornimadam, Nagercoil<br>K.K Dist. Tamil Nadu | |

| CSI Tamil Parish Family No: 087 | Mobile no: 055 374 0685 |
|---|---|
| Mr. Havin Heba (Head) |  |
| Mrs. Jackulin Milka (Wife) | |
| Baby. H. Johanna Jane (Daughter)<br>Mstr. H. Haryter Samuel (Son) | |
| Location in India:<br>Sundavilai, Alencode PO, Neyyoor<br>Kanyakumari Dist., Tamilnadu | |

| நமது மிஷினரி ஊழியத்தேவை | | |
|---|---|---|
| மிஷனரி பெயர் | திரு. சூரிபால் சதா | திரு. கிறிஸ்டோபர் |
| பணித்தளம் | நீலமங்கலம், கள்ளக்குறிச்சி மாத்தூர் | மேல்முத்தானூர் குருகிலாமூர் |
| ஸ்பான்ஸர் தொகை | AED 450/– Month | AED 450/– Month |

**இணைந்து மிஷனரி ஊழியத்தை கட்டுவோம் வாருங்கள்.**

**ஒரு குடும்பமாகவோ அல்லது பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து மிஷனரிகளை தாங்க உங்களை அன்போடு அழைக்கிறோம்.**




This reading plan will guide you through all 66 books of the Bible in the coming year.

## DAILY BIBLE READING January 2020

### "Your word is a lamp to my feet and light for my path"

| | | |
|---|---|---|
| 1 Genesis 1 – 4 | 11 Genesis 36 – 38 | 21 Exodus 17 – 20 |
| 2 Genesis 5 – 8 | 12 Genesis 39 – 41 | 22 Exodus 21 – 23 |
| 3 Genesis 9 – 12 | 13 Genesis 42 – 43 | 23 Exodus 24 – 27 |
| 4 Genesis 13 – 17 | 14 Genesis 44 – 46 | 24 Exodus 28 – 30 |
| 5 Genesis 18 – 20 | 15 Genesis 47 – 50 | 25 Exodus 31 – 34 |
| 6 Genesis 21 – 23 | 16 Exodus 1 – 4 | 26 Exodus 35 – 37 |
| 7 Genesis 24 – 25 | 17 Exodus 5 – 7 | 27 Exodus 38 – 40 |
| 8 Genesis 26 – 28 | 18 Exodus 8 – 10 | 28 Leviticus 1 – 4 |
| 9 Genesis 29 – 31 | 19 Exodus 11 – 13 | 29 Leviticus 5 – 7 |
| 10 Genesis 32 – 35 | 20 Exodus 14 – 16 | 30 Leviticus 8 – 10 |
| | | 31 Leviticus 11 – 13 |

# Christmas Carols 2019: CSI Tamil Parish Al Ain, CSI Tamil Parish Sharjah, CSI South Kerala Diocese, CSI Tamil Church Um Al Quwain, Church of Christ Love Al Ain





















## 2019 Christmas tree & Family singing



2019 Christmas carols Choir






Strictly For Private Circulation
Editor: Rev. Christopher Rajendran BSC., BD., MSC. (Psy)
Po. Box. 67747. Tel/Fax +971 3 755 9630
Mobile: 056 7105 082
E-Mail: csitcalain@gmail.com. Web: csitamilparish.org